முத்தமிழறிஞர் கலைஞரின் பொற்கால ஆட்சியில் கொண்டுவரப்பட்ட

# விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தின் 25 ஆம் ஆண்டு விழா!

## முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. நலஉதவிகள் வழங்கினார்!

விழுப்புரம், ஜூன் 10 -

கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் கொண்டுவரப்பட்ட விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தின் 25 ஆம் ஆண்டு விழாவில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு இனிப்புகளையும் , நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் 09 .06.2000 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட நமது விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் 25வது ஆண்டு வெள்ளி விழா முன்னிட்டு நகராட்சி ஊழியர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுனர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கலந்து கொண்டு வழங்கினார்கள்.

மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, பி.வி.ஆர். சு.விசுவநாதன், வே.கணேசன், நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, பொதுக்குழு உறுப்பினர் பஞ்சநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், நகர பொருளாளர் NN. இளங்கோ, மாவட்ட பிரதிநிதி நந்தா.நெடுஞ்செழியன், நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி, தொ.மு.ச செயலாளர் சேகர், தொ.மு.ச நிர்வாக பணியாளார் சங்க செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.ஸ்ரீ வினோத், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கேபிள் சுரேஷ்பாபு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் செல்வ.பிரேம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் காளிதாஸ், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் செ.அமர்ஜி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பரத், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் இளையராஜா, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஏழுமலை, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் அரவிந்தன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் கே.சாம் பசிவம், ஜி.சுரேந்தர், மூ. தேவா, எஸ்.பாலாஜி,

நகர மன்ற உறுப்பினர்கள் பி.கே.சங்கர், மோகன் ராஜ், கோமதி பாஸ்கர், பத்மநாபன், வார்டு நிர்வாகிகள் சுரேஷ்பாபு, சுமோ.முருகன், தனசேகர், நகர விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சந்தோஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் பூக்கடை சுந்தர், இரா.ராஜசேகர், பிரவின், ராம்ராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

---

சேலம் மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரம்மாண்ட வரவேற்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், ஜூன் 10 -

தமிழ்நாடு முதலமைச்சர் வருகிற 11 மற்றும் 12ம் தேதிகளில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிறார்.

அதற்காக அவர் பெருந்துறையில் இருந்து 11ஆம் தேதி மேட்டூர் வருகிறார். இந்த விழா குறித்து சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் சுற்றுலா துறை அமைச்சருமான ராஜேந்திரன் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:



சேலம் மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள பெருந்துறையில் இருந்து 11ஆம் தேதி மாலை 5 மணி அளவில் சேலம் மாவட்ட எல்லையான பவானி மேட்டூர் இடையில் உள்ள நவப்பட்டி பகுதியில் பிரம்மாண்ட வரவேற்பு தரப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொதுமக்களும் உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர். இடையில் கட்சி நிர்வாகிகளை தமிழ்நாடு முதலமைச்சர் சந்திக்க உள்ளார். பின்னர் மேட்டூர் பொதுப்பணித்துறை ஆய்வாளர் மாளிகையில் அன்று இரவு தங்குகிறார். மறுநாள் காலை 9:30 மணி அளவில் தமிழ்நாடு முதலமைச்சர் மேட்டூர் அணையில் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைக்கிறார். இதன் பின்னர் மேட்டூரில் இருந்து மேச்சேரி ஓமலூர் வழியாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடக்கும் இரும்பாலை பகுதியில் உள்ள அரசு மோகன் குமார மங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகளத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடைக்கு வருகிறார். இந்த விழாவில் ஒரு லட்சத்து ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பட்டா வழங்குகிறார். 75 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்கப்படுகிறது சேலத்தில் நடக்கும் விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் வரும் வழியில் சுமார் 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு பிரம்மாண்ட வரவேற்பு தரப்படுகிறது. சேலத்தில் நடக்கும் விழாவில் பல்வேறு புதிய திட்டங்களை தொடங்கி வைக்கிறார். இவ்வாறு துறை அமைச்சர் ராஜேந்திரன் கூறினார்.

இதன் பின்னர் அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டது அப்போது அமித்ஷா பேசும்போது தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என கூறுகிறார் என கேட்டதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தி.மு.க. தலைமை பதில் சொல்லும் என தெரிவித்தார்.

இதன் பின்னர் நாமக்கல் மாவட்டத்தில் மூதாட்டி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் அச்சம் அடைந்துள்ளனர் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார் என கேள்வி எழுப்பியதற்கு சுற்று லாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் தமிழ்நாடு அமைதி பூங்காவாக உள்ளது சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது சீராக உள்ளது என தெரிவித்தார்.

சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

கல்வி நிதியை விடுவிக்கக் கோரி

# தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை அவசர வழக்காக விசாரித்திடுவீர்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு முறையீடு!

சென்னை, ஜூன் 10 -

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தர வேண்டிய கல்வி நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், அதை விடுவிக்க உத்தரவிடக் கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ள நிலையில், அதை அவசர வழக்காக விசாரிக்க கோரி தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் முறையீடு செய்யப்பட்டு உள்ளது.

ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசுக்கு தர வேண்டிய, ரூ.2,151 கோடி நிதி, அதற்கு 6% வட்டியுடன் சேர்த்து ரூ.2,291 கோடி வழங்கக் கோரிய வழக்கில், ஒன்றிய கல்வி நிதியை விடுவிக்க கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை அவசரமாக விசாரிக்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு முறையீடு செய்துள்ளது.

முன்னதாக, ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தில் (சமக்ர சிக் ஷா அபியான்) தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூ.2 ஆயிரத்து 152 கோடி நிதியை ஒதுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. இந்த நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசை, தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கல்வி நிதி தொடர்பாக பிரதமர் மோடிக்கு தமிழக அரசு பல முறை கடிதம் எழுதியுள்ளது.ஆனால் தேசிய கல்வி கொள்கையின்படி மும்மொழி கொள்கையை அமல் படுத்தாவிட்டால் தமிழ்நாட்டுக்கு இந்த நிதியை ஒதுக்க முடியாது என்று ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தார். அவரது அறிவிப்புக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தார்.

மேலும் ஒன்றிய அமைச்சரின் அறிவிப்பை கண்டித்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த நிலையில் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ள கல்வி நிதியை வழங்கக்கோரி, உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும் என முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்து இருந்தார்.

அதன்படி, தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசு மீது மே 20ந்தேதி அன்று கல்வி தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ளது. மனுவில், அதன்படி தமிழ்நாட்டுக்கு நியாயமாக தர வேண்டிய கல்வி நிதியை விடுவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில் தமிழக அரசு கூறியிருப்பதாவது: பி.எம். ஸ்ரீ, சமக்ரா சிக்ஷா திட்டத்தின் நிதியை நிறுத்தி வைத்தது சட்டவிரோதம். புதிய கல்வி கொள்கையை அமல்படுத்தாததால் நிதியை நிறுத்தி வைப்பது ஏற்புடையதல்ல. கல்வி திட்டத்துக்கான நிலுவை நிதி வழங்கப்படவில்லை. தமிழக அரசுக்குக் கிடைக்க வேண்டிய கல்வி நிதி இல்லாததால் தமிழ்நாட்டில் இருக்கும் மாணவர்களின் நலன் பாதிக்கப்படுகிறது. சமக்ரா திட்டத்துக்கான நிதியை 6% வட்டியுடன் ரூ.2,291 கோடி வழங்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு தமிழக அரசு கூறியுள்ளது.

ஒன்றிய அரசுக்கு எதிரான இந்த மனுமீது விரைவில் விசாரணை நடைபெறும் என எதிர்பார்த்த நிலையில், மனு இதுவரை விசாரணைக்கு பட்டியலிடப்பட வில்லை. அதனால், தமிழ்நாடு அரசின் கல்வி நிதி தொடர்பான வழக்கை அவசர வழக்காக விசாரிக்க கோரி தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் முறையீடு செய்யப்பட்டு உள்ளது.

---

மானாமதுரை தொகுதிக்கு

# அரசு கலைக்கல்லூரி அறிவித்த தமிழக முதல்வருக்கு நன்றி!

## திருப்புவனம் மேற்கு ஒன்றிய கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்புவனம், ஜூன் 10 -

திருப்புவனத்தில் மேற்கு ஒன்றிய கழக செயற்குழு கூட்டம் அவைத் தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்களை மாவட்ட கழக துணை செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி த.சேங்கை மாறன் வாசித்து சிறப்புரை ஆற்றினார்.

தீர்மானங்கள் ஜூன் 3ல் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கிராமம் தோறும் கிளைக் கழகங்களில் கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி குழந்தைகளுக்கு பாட புத்தகங்கள் வழங்கி கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

திருப்புவனம் நீண்ட கால கனவான புதிய பேருந்து நிலையம் . மற்றும் மானாமதுரை தொகுதிக்கு அரசு கலைக்கல்லூரி

அறிவித்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானிக்கப்பட்டது. கிளைக் கழக நிர்வாகிகள் பாகம் முகவர்கள். கிராமந்தோறும் இல்லங்களில் சென்று பொதுமக்களுக்கு தமிழக அரசின் நான்காண்டு சாதனங்களில் விளக்கிட. என தீர்மானிக் கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள். பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி. பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லா கான். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. மாவட்ட விவசாய அணி துணை தலைவர் சேகர். மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் தேவதாஸ். மாவட்ட பிரநிதிகள். ஏனாதி ராமலிங்கம். லாடனந்தல் சுப்பையா. மாங்குடி வெங்கடேசன். கவுன்சிலர் பாலகிருஷ்ணன். ஒன்றிய நிர்வாகிகள் மகேந்திரன் சக்திமுருகன். ராமு. கோபால். அன்னமுத்து. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுகரசு. நகர் நிர்வாகிகள் ராசு மீனாட்சி சுந்தரம். கெங்குராமன்.

நகர் இளைஞர் அணி அமைப்பாளர் கண்ணன். தொமுச பிச்சை. மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ராஜா. மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சித்ரா. ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் காளிதாஸ் .திருப்பதி. கணேஷ் பிரபு. பிரசாத். மாணவரணி அமைப்பாளர் பாண்டியர் கிருஷ்ணன். தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் பாலகிருஷ்ணன். புவனேஸ்வரன். மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



திருப்புவனத்தில் மேற்கு ஒன்றிய கழக செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் வசந்தி சேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்களை மாவட்ட கழக துணை செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி த.சேங்கை மாறன் வாசித்து சிறப்புரை ஆற்றினார்.

---

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




---

தங்கவயல் தி.மு.க. சார்பில்

# இராபர்ட்சன் பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## வழக்கறிஞர் டேவிட் தலைமையில் நடைபெற்றது!

தங்கவயல், ஜூன் 10 -

தமிழர்களின் வாழ்வுரிமைக்காக போராட்டம் நடத்திய கலைஞரியின் வாழ்க்கை பிறந்தது முதல் இறந்தது வரை போராட்டமாகவே இருந்தது என்று தங்கவயல் நகர தி.மு.க. புகழாரம் சூட்டியது.

தங்கவயல் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கலைஞரியின் 102 வது பிறந்த நாள் விழா இராபர்ட்சன்பேட்டை, பி ரிச்சர்ட் சாலையில் உள்ள கழக அலுவலகமாக கலைஞரகத்தில் வழக்கறிஞர் டேவிட் தலைமையில், சீனிவாசன், ஜீவானந்தம், டிரைவர் ரவி ஆகியோர் முன்னிலையில் நடந்தது. பொறுப்புக்குழு உறுப்பினர் நாத்திகம் என்.எஸ். ஸ்ரீதர் உரையாற்றினார்.

கழக கொடியை மூத்த உறுப்பினர் விஸ்வநாதன் ஏற்றினார். கலைஞர் திருவுருவ படத்திற்கு முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் கு.ஆதித்தன் மாலை அணிவித்தார். பொற்செழியன், ஏ.வீ.இளங்கோவன் ஆகியோர் இனிப்பு வழங்கினர். வி.கார்த்திக் வரவேற்றார். குமார் நன்றி கூறி னார்.

நிகழ்ச்சியில் கீழ்காணும் தீர்மானங்களை ஆ. கரிகாலவளவன் வாசித்தார்.

1. பெரியார் சிந்தனையாளரும், பகுத்தறிவாளரும் பேராசிரியர் கு.வணங்காமுடி மற்றும் தங்கவயல் கழக மூத்த உறுப்பினர் சி. சேகரன் ஆகியோர் மறைவுக்குப் இரங்கல் தெரிவிக்கப்பட்டது

2. முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3 ம் தேதியை செம்மொழி நாளாக அறிவித்தது செயல்படுத்திய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

3. தலைமைக் கழக துணை பொதுச் செயலாளராக கழக மாநிலங்களவை தலைவர் திருச்சி என்.சிவா நியமனம் செய்துள்ளதை மகிழ்ச்சியாக வரவேற்கிறோம் என்பது உள்பட 5 தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டது.

அதை தொடர்ந்து கழக பொறுப்பு குழு உறுப்பினர் நாத்திகம் என்.எஸ்.சிறிதர் பேசும்போது, கலைஞர் தனது வாழ்நாளை தமிழ், தமிழர் நலன் ஆகியவைக்கு அர்பணித்தார். அவர் ஆட்சி அரியணையில் அமராமல் இருந்திருந்தால் தமிழினம் எப்படி திரைமாறி போய் இருக்கும் தெரியாது.

போராட்டம் ஒன்றே கலைஞரியின் வாழ்க்கையில் ஒன்றிபோய் இருந்தது.

அவர் பிறந்தது முதல் இறந்தபின் மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணாவின் சமாதி அருகில் துயில் கொள்ளும் வரை போராட்டம் நடத்தினார். அவர் நமக்கு வழிகாட்டியாக உள்ளார். அவர் வழியில் கழகத்தினர் கருத்து வேறுபாடுகள் மறந்து ஒற்றுமையாக கழக வளர்ச்சி பணியில் ஈடுப்பட வேண்டும் என்றார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு வனத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி முதுகுளத்தூர் மத்திய ஒன்றிய கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது . உடன் முதுகுளத்தூர் மத்திய ஒன்றிய கழக செயலாளர் கோவிந்தராஜ் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சத்தி யேந்திரன், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரஞ்சித் மணிகண்டன், மற்றும் மாவட்ட ,ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணியினர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. இராதாமணி

ஜூன் 10 (2019)



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திருமணம் செய்யாமலேயே கழகப் பணியாற்றியவர்.

கலிஞ்சிக்குப்பம் கிளைக் கழகச் செயலாளராக, பின்னர் ஆறு முறை கண்டமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக – விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் – மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.